# செம்பதாகை

மலர்: 5
இதழ்: 1
தை 1983
விலை ரூபா 1-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# ஜே. ஆரின் கனவு பலிக்குமா?

திரு ஜே. ஆர். ஜயவர்த்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்கப் போகிறார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் ஏனைய சர்வதேசப் பிற்போக்கு வாதிகளினதும் ஆலோசனை - ஆதரவோடுதான் நீண்ட நாட்களாகக் கண்டு வந்த கனவின் ஒரு பகுதியை நிறைவேற்றி விட்டதாக நினைக்கும் ஜே.ஆர்., அடுத்து வரும் ஆண்டுகளில் தனது முழுத் திட்டங்களும் சுலபமாக நிறைவேறி விடும் என்று கனவு காண்கிறார். இங்கே அவரது கனவு பலிக்குமா என்பதே கேள்வியாகும்.

1978ம் ஆண்டில் அரசியல் சாசனத்தை மாற்றி அமைத்து தன்னைத்தானே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே. ஆர் நியமனம் செய்து கொண்டபோதே இந்நாட்டின் பாராளுமன்ற ஜனநாயக அமைப்புமுறைக்கு முடிவுகட்டும் முதலாவது அடி கொடுக்கப்பட்டது. இவ் அரசியல் மாற்றமானது விதேசிய ஏகபோக முதலாளிகளினதும், உள்நாட்டுப் பெரும் முதலாளிகளினதும் பொருளாதாரச் சுரண்டலின் தேவையைப் பூர்த்தி செய்ய வழி வகுத்தது. இத்தகைய பொருளாதாரமாற்று நடவடிக்கைகள் இந்நாட்டின ஏகப் பெரும்பான்மையான மக்களின் நலன்களைப் பாதித்தன. நாளடைவில் தொழிலாளி வர்க்கத்திடம் இருந்தும் ஏனைய உழைக்கும் மக்களிடம் இருந்தும் வரக்கூடிய எதிர்ப்பை ஜே. ஆர். அனுபவ ரீதியில் அறிந்த ஒருவர் என்பதால் அதை முன் கூட்டியே தடுப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகளைச் செய்தார். அதுவே தொழிலாளர் விரோத, தொழிற்சங்க விரோத, ஜனநாயக விரோதச் சட்டங்களாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்தப் பட்டன.

எதிர்க்கட்சிகளை குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சின்னாபின்னப்படுத்தும் நோக்குடன் அதன் தலைவியின் குடியுரிமைகளைப் பறித்து பாராளுமன்ற ஜனநாயகத்தில் கூறப்பட்ட எதிர்க்கட்சி அவசியத்தைக் கேலிக்குரிய ஒன்றாக்கி விட்டனர்.

இவற்றுடன் கூடவே தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளைத் குறைந்த பட்சஅடிப்படையில் தானும் தீர்த்து வைக்கும் முயற்சிகளுக்குப் பதிலாக அவற்றை மேலும் தீவிரப்படுத்தும் பாதையில் புலிகள் தடைச் சட்டம், பயங்கரவாத ஒழிப்புச்சட்டம் போன்ற கொடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இதனால் மேலும் இன உணர்வுகள் தூண்டப்பட்டு அவை தமது ஆளும் வர்க்க நோக்கங்களுக்குப் பயன் படுத்தப்பட்டன.

தனிக் கட்சி - தனி நபர் பாசிச சர்வாதிகாரத்தின் நடைமுறை நிகழ்வை அண்மையில் நடைபெற்ற இரு தேர்தல்களிலும் மக்கள் நேரடியாகக் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இன்று சகல முனைகளிலும் தான் வெற்றி ஈட்டி முன்னேறிக் கொண்டிருப்பதாக ஜே. ஆர். பெருமிதம் கொள்கிறார். தமது பிற்போக்கு செயல்களிலும், வரலாற்றை திசை திருப்பும் நடவடிக்கைகளிலும் தாம் வெற்றி பெற்று முன்னேறுவதாகவே வரலாறு காட்டும் பல புகழ்பெற்ற பிற்போக்குவாதிகள் தமது காலத்தில் பெருமிதம் கொண்டனர். ஆனால் அவர்களுக்கு மக்களும் வரலாறும் கற்பித்த பாடத்தை ஜே. ஆர். போன்

(6-ம் பக்கம் பார்க்க)

## கண்டி யாத்திரை தொடரலாம்!

“அன்று இன்றைய ஜனாதிபதியினால் நடத்தப்பட்ட வரலாற்று புகழ்மிக்க கண்டியாத்திரை இம்புல்கொட என்ற இடத்தில் வைத்து தடுக்கப்பட்டது. அவ்வாறு தடுக்கப்பட்டதற்கு காரணமாக இருந்தவர் எஸ். டி.. பண்டாரநாயக்காவே. ஆனால் இன்று அவர் எம்முடன் இருப்பதால் தடுக்கப்பட்ட அவ் யாத்திரையை மீண்டும் தொடர்வதில் எவ்வித சிரமமும் இருக்காது”

- அண்மையில் கம்பஹாத் தொகுதியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அமைச்சர் காமினி திசநாயக்கா கூறினார்

சிலோன் டெயிலி நியூஸ்
24-1-83

## மாநகர - நகரசபைத் தேர்தல்களுக்கு பதவிகளைப் பங்குபோடுவதில் கூட்டணிக்குள் போட்டி

### பதவி மக்கள் சேவைக்கல்ல ‘பசை’ தேடிக் கொள்ளவே!

மாநகர, நகரசபைகளுக்கு விரைவில் தேர்தல்கள் நடாத்தப் போவதாக அரசு அறிவித்துள்ளது. இவ் அறிவித்தலால் தமிழர் கூட்டணி வட்டாரங்களில் ஆரவாரங்கள் ஆரம்பித்துள்ளன. யார் யாரைப் பட்டியலில் முதல் இரண்டாவது தொடக்கம் பத்தாவது இருபதாவது வரைப் பதிவு செய்வது என்பதில் அக்கறை செலுத்தப்படுகிறது. இன்று முன்னைய தேர்தல் போல் இல்லையென்பதால் எல்லாம் வல்ல கூட்டணியின் செயலாளர் நாயகத்தின் நம்பிக்கை விசுவாசத்தைப் பெறுவதில் ஒருவர் மாறி ஒருவராக அவரைத் தரிசனம் செய்து வருகின்றனர். செயலாளர் நாயகம் யார் யாரை உதைப்பது யார்யாரை அணைப்பது என்பதையிட்டு சுய ஆலோசனையில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்தமுறை மாநகர-நகரசபைகளுக்கு தேர்தல் நடந்தவேளை, அத்தேர்தல்களின் முடிவை உலக நாடுகள் பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறி, மக்களின் கண்களில் மண்ணைத் தூவிய தமிழர்கூட்டணி, யாழ் - மாநகரசபையின் அதிகாரத்தையும் பல நகரசபைகளின் அதிகாரங்களையும் பெற்றுக் கொண்டதை மக்கள் நினைவில் வைத்திருக்கின்றனர். இப்படிப் பெற்றுக்கொண்ட நிர்வாகத்தின் கீழ் இதுவரை என்ன நடைபெற்றிருக்கின்றன. உதாரணத்திற்கு யாழ் மாநகரசபையின் மூலம் யாழ்ப்பாணநகர மக்கள் எந்த அபிவிருத்தியை எந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளார்கள்? இதுபற்றி யாழ்நகர் வரியிறுப்பாளர் ஒருவரைக் கேட்டால் மணிக்கணக்கில் மாநகரசபை நிர்வாகத்தைத் திட்டித் தீர்ப்பதையே காணமுடியும்.

யாழ் நகர முதல்வர் கிழமைக்கு ஒரு தடவையாவது தமிழ் ஈழத்தைப் பற்றி தவறாது அறிக்கை விட்டு வந்திருக்கிறார் என்பது மட்டும் உண்மை. அதேபோல் உதவி முதல்வர் பதவியை கனவான்கள் ஒப்பந்தப்படி உரியவர்கள் மாற்றிக் கொண்டதும் உண்மை. அதேவேளை நகரம் நரகமாக மாறிவிட்டது என்

(6-ம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரியுங்கள்!

அண்மைக்காலத்தில் அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட அரசியல் மோசடிகளையும், அடக்கு முறைகளையும் நியாயப்படுத்துவதற்கும், அடுத்து எடுக்கப்படவுள்ள பாசிச நடவடிக்கைகளுக்கும் ஜனநாயக முலாம் பூசி மக்களையும் வெளி உலகையும் ஏமாற்றுவதற்கே சுதந்திரதின-ஜனாதிபதி தின வைபவங்கள் மிகக் கோலாகலமாக நடத்தப்படவுள்ளன. இத்தகைய கொண்டாட்டங்களை நாட்டின் சகல ஜனநாயக தேசபக்த சக்திகளும் பகிஷ்கரித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

அண்மையில் அடுத்தடுத்து நாட்டில் இடம்பெற்ற இரு தேர்தல்களும் அவற்றில் அரசு பின்பற்றிய நடைமுறைகளும் நமது நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளையும், ஜனநாயக வழிமுறைகளையும் குழிதோண்டிப் புதைத்துள்ளன. தமது தவறான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தி மக்களை மென்மேலும் கஷ்டத்திற்கு ஆளாக்குவதற்கு அரச அடக்குமுறைகளைத் தீவிரப் படுத்தி உள்ளது.

எனவே நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் அக்கறை கொண்ட சகல ஜனநாயக தேசபக்த சக்திகளும் இப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுத் தமது வன்மையான எதிர்ப்பை அரசுக்கு உணர்த்துவது இன்றைய நிலையில் மிகவும் பொருத்தமான ஒரு எதிர்ப்பு நடவடிக்கை என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வசன வாக்கெடுப்பும் சதிகாரக் கும்பலும்

சர்வசன வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்டதை அடுத்து சதிகள், நக்ஸலைற்றுகள் என்ற விதமான அறிக்கைகளும் ஸ்ரீ. ல. சு. கட்சியில் உள் முரண்பாடுகளைப் பயன்படுத்தும் விதமான பல நடைமுறைகளும் ஆட்சியாளரால் மேற்கொள்ளப்பட்டன. ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் சதி, ஜனாதிபதியை கொலை செய்யச் சதி. இவ்வாறாக நாடே சதிக்காடு என்று நம்பும் வகையில் அரசின் பிரச்சார ஊது குழல்களும் அதன் பாதந்தாங்கிப் பத்திரிகைகள் யாவும் ஓயாது முழங்கின. அதுவும் போதாமல் ஸ்ரீ.ல. சு. க. செயலாளர் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது 1980ம் ஆண்டு செய்யமுனைந்த சதி ஒன்றுக்குச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரண்டு வருடமாக இந்தச் 'சதி' அம்பலமாகாமல் இருந்தது பெரும் புதுமையே. இது பற்றிய விஷயங்கள் நீதிமன்ற விவகாரங்களாகிவிட்டதால், அவ் விவ விவரங்கள் பற்றி இங்கு எழுதுவது உசிதமல்ல. அந்தச் சதியும் மற்றச் சதிகளும் ஒருபுறமிருக்க பாராளுமன்ற அரசியல் முறைக்கே வேட்டு வைக்குமாறு 1978இல் வந்த புதிய அரசியல் சட்டமும் அதையடுத்து வரிசையாக நிறைவேற்றப்பட்ட திருத்தங்களும் மற்றும் புலிகள் இயக்கத் தடைச் சட்டமும் பயங்கரவாத விரோதச்சட்டமும் அவசரகாலச் சட்டமின்றியே அவசரகாலத்துக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பை அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடத்திய காரியங்களும் சதிகள் என்றால், அது சாதாரண சதிகாரர்களை இழிவுபடுத்துவதாகிவிடும்.

'சுதந்திர'னும் 'அத்த'வும் கூறும் எந்தக் கருத்து பற்றியும் நமக்கு அதிகம உடன்பாடு இருந்ததில்லை. ஆனாலும் அப் பத்திரிகைகள் சர்வஜன வாக்கெடுப்பின்போது மூடப்பட்டதும் பல அச்சங்கள் எதிர்க்கட்சிகட்கும் பயன்பட முடியாதவாறு செய்யப்பட்டதும் நமக்கு உடன்பாடாக இல்லை. ஏனென்றால் நமக்கு சர்வஜனவாக்கெடுப்பு ஜனநாயகம்பற்றி தெரியாது. பலதேர்தல் தொகுதிகளில் எதிர்க்கட்சி வாக்காளர்கள் மிரட்டப்பட்டதாக வரும் முறைப்பாடுகள் எல்லாம் உண்மையாக இருந்தாலும் அவை சதிகள் அல்ல, அவை நம் சர்வஜன வாக்கெடுப்பு ஜனநாயக முறையின் வரைவிலக்கணங்கட்கு உட்பட்டவை என்று புரிந்து கொள்ளுங்கள்.

நீண்ட காலமாக பாராளுமன்ற ஜனநாயக முறைக்குப் பழக்கப்பட்டதும் ஜனநாயக உரிமைகளைப் போராடி வென்றதுமான பிரான்ஸில் அரசாங்கங்கள் ஸ்திரமற்று இருந்த காலம் ஒன்று இருந்தது. 2ம் உலக யுத்தத்தின் பின் நீண்டகாலம் அரசியல் நெருக்கடியும் பொருளாதார நெருக்கடியும் பிரான்ஸை உலுக்கின. அரசாங்கங்கள் மாதக் கணக்கிலும் வாரக் கணக்கிலும் தாக்குப்பிடிக்கவே திணறின. இச் சூழ்நிலையில் பிரான்ஸில் அதிகாரத்துக்கு வந்த டிகோல் தன் கையில் அதிகாரங்களைக் குவித்துக் கொண்ட ஒரு ஜனாதிபதியாக உருமாறினார். அவர் நீண்ட காலமாகவே சர்வஜனவாக்கெடுப்பு மூலம் நாட்டை நிர்வகித்தார். நேர்மையாகவே நடத்தப்பட்ட தேர்தல்களிலும், பெரிய பிரச்சனைகள் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்புகளிலும் டிகோலை முறியடிக்க முடியவில்லை. ஆனால் டிகோலுக்கு சர்வஜன வாக்கெடுப்பு தன் செல்வாக்கை உலகுக்குக் காட்டும் ஒருஆயுதமாகவும் பயன்பட்டது. இதனால் 1969ல் அவர் (வழமையாக மக்கள் எதிர்க்காத) ஒரு சில்லறை விஷயத்தையொட்டி ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினார். அவரது அரசியலில் அலுத்துப்போன மக்கள் அவ் வாக்கெடுப்பின்போது அவரை முறியடித்து அவரை அரசியலுக்கே தலை முழுகுமாறு செய்துவிட்டனர். நம் புண்ணிய பூமியில் அந்த மாதிரி எல்லாம் அரசியலில் சூதாட மாட்டார்கள். சிறிமா பண்டாரநாயகாவின் குடியியல் உரிமை பறிப்பு, பயங்கரவாத தடைச்சட்டம், தொழிற்சங்க வெள்ளை அறிக்கை, கல்வி வெள்ளையறிக்கை போன்ற 'அற்ப' விஷயங்களுக்காக ஜனங்களை அலட்டும் பழக்கம் நம் ஆட்சியாளர்கட்குக் கிடையாது. பாராளுமன்றப்பெரும் பான்மையை நீடிப்பது போன்ற விஷயங்களில் ஒருவேளை மறுபடியும் சர்வஜன வாக்கெடுப்பு நடக்கலாம் அதுவும் பொது ஜனங்கள் இன்னும் ஆறு வருடங்களுக்கு நல்ல பிள்ளைகளாக எதிர்க்கட்சிக் ''சதிகாரர்கட்கு'' ஆதரவு கொடுக்காமல் நடந்து கொள்வார்களானால் அவர்களுக்கு அந்த ஆறுதல் பரிசு வழங்கப்படலாம்.

நம் ஜனநாயகமுறை மார்க்கோஸின் பிலிப்பைன்ஸ் சுகார்த்தோவின் இந்தோனீஷியா, டியெமினதும் நியூவினதும் தென் வியற்னும், பாக்கின் வாரிசுகளின் தென்கொரியா ஆகியவற்றை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அங்கெல்லாம் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி 89—99 வீதம் வாக்குகளாவது எடுப்பார். சர்வஜன வாக்கெடுப்பில் 95 வீதம் வாக்குகளாவது சாதகமாக விழும். பாராளுமன்றம் ஜனாதிபதியின் சட்டைப் பையில் இல்லாதநேரம் சபாநீத்துக்குப் பொலிஷ்பூசிக்கொண்டிருக்கும். நாம் என்னவெறும் கன்றுக்குட்டிகள்தானே என்று அலுத்துக் கொள்ளாதீர்கள், எங்களுக்கும் காலம் வரும். காலம் வந்தால் தேர்தல் நடத்த ராணுவப் படைகள் வரும் வாக்குகளும் 90 வீதமென்ன 99·99 வீதம் அரசாங்கத்துக்கு சார்பாக வரும். ஒரு வாக்குச் சாவடியில் இங்கே யாரோ ஒரு அரசாங்க எம்.பி. தேர்தல் அதிகாரியைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாக யாராவது கேள்விப்பட்டால் தயவு செய்து நம்பாதீர்கள். ஏனென்றால் பொலிஸ்காரர் ஒருவரே அதைக் கண்டதாக ஞாபகமில்லை என்று சொல்லிவிட்டார். யாராவது 'சதிகாரர்கள்' கதை கட்டியிருப்பார்கள்.

சதிகாரர்களை அடையாளங்காண உங்களுக்கு இப்போ சிறிது கஷ்டமாக இருக்கலாம் இன்னும் கொஞ்ச நாளில் அது மிகவும் எளிய விஷயமாகிவிடும். அரசாங்கத்தின் எந்தவொரு நடவடிக்கையையும் விமர்சிக்கவோ கண்டிக்கவோ எதிர்க்கவோ முனையும் அத்தனை பேருமே சதிகாரர்கள்! ஜாக்கிரதை.

# சம்பவங்களும் அதன் போக்குகளும்

அவதானி

★

## இனிப்புத் தடவிய கசப்பு மருந்துகள்!

அரசாங்கப் பிரச்சாரப் பீரங்கிகள் என்னதான் சர்வசன வாக்கெடுப்பின் வெற்றி பற்றி முக்கித் தள்ளினாலும் அந்த வெற்றியின் வெறுமையை உயர்மட்ட யூ.என்.பி. யினர் உணராமல் இல்லை.

மாத்தளையில் வெள்ளம் மழை காற்று எல்லாவற்றையும் மீறி, ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்றியதையும்விட அதிகமானோர் பங்கு பற்றிய அற்புதத்தையும், அத்தனைகளையில் ஜனாதிபதித்தேர்தலில் சிறுபான்மை வாக்குகளைப் பெற்ற அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பில் அமோகமான பெரும்பான்மை பெற்ற அதிசயத்தையும் ஜீரணிக்க முடியாமல் சிலர் சங்கடப்படலாம். நமக்கென்னவோ இந்தப் புண்ணிய பூமியில் இப்போது என்னவும் நடக்கலாம் என்பதில் அதிசம் சந்தேகம் இல்லை.

அரசாங்கம் அடுத்து மேற்கொள்ளவுள்ள ரூபாவின் பெறுமதியை 25 வீதம் மட்டில் குறைக்கும் நடவடிக்கையும், பஸ்-புகையிரதக் கட்டணங்கள் அதிகரிப்பு என்பன பற்றி நாம் அதிர்ச்சி அடைவதற்கில்லை. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இலவசக் கல்வி போகும். இலவச மருத்துவம் சீரழிக்கப்பட்டதுபோல் கல்விமுறையை வெள்ளையறிக்கை காட்டும் வழியில் சீரழிப்பார்களோ அல்லது மகாபொல போன்ற இனிப்புத் தடவிய கசப்பு மருந்து தருவார்களோ என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

★

## சாதியும் சலுகையும்

சாதி அடிப்படையில் பாராளுமன்றத்தில் இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் எனவும் பல்கலைக்கழகத்தில் இடங்கள் ஒதுக்கப்படவேண்டுமெனவும் தர்-மிஸ்டர் சனாதிபதியிடம் தாழ்த்தப்பட்ட தமிழர் சார்பில் சிலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். முன்னது பற்றி நமக்கு அக்கறையில்லை. ஏனென்றால் பொம்மைப் பாராளுமன்றத்தில் உயர்சாதித் தலையாட்டிப் பொம்மையும், தாழ்சாதித் தலையாட்டிப் பொம்மையும் ஒன்றேதான். பின்னதில் நியாயம் உள்ளது. ஆனால் இந்த விதமான சலுகைகள் சாதியைக் கூறி சாதிப்பெயரில் தங்கள் நலன்பேணும் வசதி படைத்த சிலருக்கு மட்டும் பயன்படக்கூடாது. எனவே சலுகை வழங்கப் பயன்படுத்தப்படவேண்டிய அடிப்படையே வேறு. மாணவரின் பொருளாதார வசதி, பாடசாலை வசதி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு சலுகை வழங்குவதும் தற்போதுள்ள பின்தங்கிய மாவட்ட அடிப்படையிலும் சிறந்ததாகும். இது சாதி அடிப்படையில் தாழ்த்தப்பட்ட ஏழை மாணவர்கட்கும் சாதி அடிப்படையில் ''தாழ்த்தப்படாத'' ஆனால் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்கட்கும் சமகாலத்தில் நியாயம் வழங்கும்.

சீனாவில் உயர் கல்விக்கு வர்க்க அடிப்படையில் குறிப்பிடத்தக்க அளவு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இதன் மூலம் தொழிலாளர் விவசாயிகளது பிள்ளைகட்கு உயர் கல்வி வசதிகள் பெருமளவு அதிகரிக்கின்றன. நம்நாடு அதன் பெயரில் உள்ளபடி ஜனநாயக நாடா? சோஷலிச நாடா? அல்லது குடியரசு தானா? மூடிசூடா சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகரும் நமக்கு இந்த மாவட்ட அடிப்படை போன்ற எல்லாமே சனங்களை அணைப்பும் எத்துவேலைகள் தான்.

★

## வாய்ச் சொல்லில் வீரரடி!

தமிழ்ஈழ விடுதலை அணியினர் தமிழ் மக்கள் பொதுசன வாக்கெடுப்பில் அரசாங்கத்தை எதிர்த்து வாக்களித்ததையிட்டுப் பாராட்டியிருக்கிறார்கள் (அரசியலில் காலஞ்சென்ற) சண்முகதாசனும் பாராட்டியிருக்கிறார் இப்போது பகிஷ்கரிப்பு பஜனை மடங்களின் போதனையை நிராகரித்ததற்காகப் பாராட்டுகிறார்களா?

இவர்கள் மக்களுக்குத் தலைமைதாங்கத் தகுதியுள்ளவர்களானால் மக்களது முடிவு சரியா தவறா என்று முதலில் சொல்லட்டும். அது சரியானால் அது தங்களது தவறு என்று நிரூபிக்கிறது என்று ஒப்புக்கொள்ளட்டும்; அதற்கு நேர்மைத்திறமில்லை. மக்களது முடிவு தவறென்றால் அதைத் தவறென்று மக்களுக்கு விளக்கட்டும் அதற்கு நெஞ்சில் உரமில்லை. வஞ்சனை பேசும் வாய்ச்சொல் வீரர்கள் வேறென்ன சொல்வது.

★

## விறகாகப்போகும் கோடாலிக் காம்புகள்

இன்னும் சில காலத்தில் அரசாங்கத்தின் பெரும் தலைவலிகளில் முக்கியமான ஒன்றாக ஜே. எஸ். எஸ். எனும் யூ.என். பி. சார்பு தேசிய தொழிலாளர் சங்கம் அமையும். இதுவரை எதிர்க்கட்சித் தொழிற்சங்கங்களை நசுக்கும் சேவையையும், அரசியல் காடைத்தனத்துக்கும் பயன்பட்ட ஜே. எஸ். எஸ்.ஸை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அரசாங்கத்தின் அவசியத் தேவைகளின் ஒன்றாகும். ஜே. எஸ். எஸ். அணியில் உள்ள பல ஆயிரக்கணக்கான குண்டர்களுக்குத் தீனி போடுவதும், அதிவேக விலைவாசி உயர்வு நிகழும் சூழ்நிலையில் இவர்களை கிளர்ச்சிகளைத் தூண்டாமல் பார்ப்பதும் அவசியமாகியுள்ளது. அண்மையில் சர்வசன வாக்கெடுப்புக்குச் சிறிது முன் நடந்த துறைமுக வேலைநிறுத்தம் போன்று மேலும் நிகழாமல் தடுக்க ஜே. எஸ். எஸ். மேல்மட்டங்களை அடக்கிக் கட்டுப்படுத்தல் அவசியமாகியுள்ளது. கூலிப்படைகளைத் தலைமையாகக்கொண்ட ஜே.எஸ்.எஸ். இறுதியில் அடிபணிவது தவிர்க்க முடியாதது. தொழிலாளர்கள தங்கள் தொழிற்சங்க உரிமைகளைத் திருப்பவும் வலியுறுத்த ஒன்றுபடவேண்டிய சூழ்நிலை அதிவேகமாக உருவாகி வருகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

★

## அடிப்பியோ எங்கொப்பா மவனே........

அடிப்பியோ எங்கொப்பா மவனே சிங்கப்டா சிங்கம்! என்று வீராவேசமாக ஆரம்பித்து அதே வசனத்தில் அழுகையாக முடியும் நகைச்சுவைக் காட்சியொன்று 1940களில் ஒரு தமிழ்ப்படத்தில் வந்தது. (படத்தின் பெயர் மறந்து விட்டது) பலகாலம் அந்த வசனம் மிகவும் பிரபலமாக இருந்தது. அண்மையில் சில வருடம் முன்புகூட ஒரு தடவை வானொலியில் கேட்டநினைவு. 'இப்போது தேர்தல் நடத்துவியோ எங்கொப்பா மவனே..! என்று த.வி.கூ. நகைச்சுவை நடிகர்கள் ஒரு மாதம் முன்பு வீரவசனம் பேசி ராஜினாமாக் கடிதம் எழுதி இப்போது அழாக்குறையாக நழுவும் நிலைக்கு வந்து விட்டார்கள் முழுமாவட்டத்திலும் எம்பிக்கள் ராஜினாமா செய்தால் அங்கு தேர்தல் நடத்துமாறு சட்டத்தைத் திருத்துவதாக ஜே. ஆர். சொன்னதும் கூட்டணி வீரர்கட்குச் சப்தநாடியும் அடங்கி விட்டது. வடக்கிலும் கிழக்கிலும் எல்லோருக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்று நழுவப் பார்க்கிறார்கள். ஜே. ஆர். விடுவதாகத் தெரியவில்லை. (தேர்தல் நடத்தும் உத்தேசம் இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பை மனுஷன் நடத்தியிருப்பானா?) ஜே. ஆருக்கு விளையாட்டு, தளர்பதிக்குச் சிவன் போகிறது! நீதி: பூனை மடியில் உற்கார்ந்திருக்கும் எலி வீரம் பேசக்கூடாது.

தளர்பதியாருக்கு ஒரு யோசனை: இனிமேல் வடக்கில் பேசும் பேச்சுக்களை எல்லாம் அதிகார பூர்வமாக, ஜே. ஆருக்கு என்று விசேஷ

(3-ப் பக்கம் பார்க்க)

# இரு தேர்தல்கள்

## ஒருகண்ணோட்டம்

ஜனாதிபதித் தேர்தலில் வழவழாவென்று 'அக்கறையின்மை' அரசியல் பேசிய கூட்டணித் தலைமை தாம் மனதார விரும்பிய விளைவைக் கண்டது. அடுத்து (எந்த அரசியல் கற்றுக்குட்டியும் கூட எதிர்பார்க்க கூடிய விதமாக) பாராளுமன்றத் தேர்தலைத் தவிர்த்தல் மூலம் யூ. என். பியின் பாராளுமன்ற பலத்தை நீடிக்கும் முயற்சி வந்தபோது அவர்களது அக்கறையின்மை மாறி விட்டது. என்ன காரணம்?

இவர்களது அக்கறையின்மை த. ஈ. வி. அணியின் பகிஷ்கரிப்புஎல்லாவற்றையும மீறி, சேர்தல்களில் வழமையாக வாக்களிக்கும் 80 வீதம் வாக்காளரில் பாதிப்பேர் தேர்தலில் டங்குபற்றியதோடு அமோகமான அளவில் ஜே. ஆருக்கு விரோதமாகவும் வாக்களித்தனர். வட - கிழக்கு மாகாணத் தமிழர்கட்குப் பெரும்பாலோருக்கு தமிழரசு காங்கிரஸ், கூட்டணி என்ற கட்சிகளைத் தவிர வேறு யாருக்கும் வாக்களிக்கும் பழக்கம் இருந்ததில்லை. சமசமாஜிகளுக்கும திரிபுவாதிகளுக்கும் தேர்தலில் கிடைக்கும் வாக்குகள் தேய்ந்து கண்ணுக்குத் தெரியாதளவு சுருங்கிப் பலகாலமாகிவிட்டது. இந்த நிலையில், கணிசமான அளவு வாக்காளர்கள் பொறுபபுணர்வுடன் நடந்து கொண்டனர்.

யூ. என். பி. ஆட்சியை கூட்டணி ஆதரித்தாலும் சரி ஆதரிக்காவிட்டாலும் சரி வட, கிழக்கு மாகாணத் தமிழர்கள் அரசாங்கத்தின் சூழ்ச்சியை எதிர்க்கப் பெருவாரியான அளவில் வாக்களித்தே தீருவார்கள் என்பது என்றைக்கும் நிச்சயம். கூட்டணித்தலைமையின் நிலை அரசனை நம்பிப் புருஷனை கைவிட்ட கதையாகி விட்டது. இப்போது எப்படி ஜே. ஆரைத் தேற்றுவது. அடுத்த தேர்தலுக்கு முகங் கொடாமல் எப்படித் தப்புவது என்ற இக்கட்டில் அகப்பட்டு கூட்டணி திண்டாடுகிறது.

த. ஈ. வி. மு. பற்றிய பிரமைகள்சில இப்போதாவது கலையத் தொடங்கியிருக்கும் என நம்பலாம். முன்பு செம்பதாகையில் குறிப்பிட்டது போல கூட்டணியும் இவர்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே!

ஜனாதிபதி தேர்தலில் ஜே. ஆருக்கு மறைமுகமாக உதவித்தம் ட்ரொஸ்கிவாத பாரம்பரியத்தை மக்களுக்கு மீண்டும் நினைவூட்டிய சொல்லின் (இனிமேலும் லங்கா சமசமாஜக் கட்சி என்று ஒன்று இருப்பதாக யாரும் எண்ண வேண்டியதில்லை!) அரசியலில் தம்மை மீண்டும் நிலைநாட்டிக்கொள்ள சர்வஜன வாக்கெடுப்பில் அரசாங்கத்தை எதிர்க்க முன்வந்தது. ஆனால் இது பிராணன் போனபிறகு நடக்கும் முதலுதவி!

கொல்வின் ஏதாவது சொன்னால் அதை மறுத்துப் பேசுவதை விட வாசு-விக்கிரமபாகு (நவ சமசமாஜிகள்) தலைமைக்கு வேறு அரசியலே கிடையாது போல் தெரிகிறது. வேலை தெரியாமல் பகிஷ்கரிப்பு என்று ஆரம்பித்து எல்லாரையும் குழப்ப முனைந்து தங்களை மேலும் தனிப்படுத்திக் கொண்டு விட்டபிறகு இப்போது யூ. என். பி. விரோத ஐக்கியம் பற்றிப் பேசுகிறார்கள்.

விஜேவீரவின் தேர்தலுக்குச் செலவிட்ட பணமும், நேரமும் சர்வஜன வாக்கெடுப்பின்போது ஜே.வி.பி.க்குக் கிட்டவில்லையென்றால், அதன் அர்த்தம் என்ன? இவர்களுக்கு இவ்வளவுகாலமும் பண உதவி செய்தவர்கள் இந்த நேரத்தில் மறந்துவிட்டார்களா? அப்படியானால் ஏன்? அல்லது கைவசம் இருந்த நிதியை எல்லாம் தேர்தல் சூதாட்டத்தில் இழந்து விட்டார்களா? அல்லது தங்களுக்கு பாராளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனமும் கிட்டாது என்று தெளிவானவுடன் பாராளுமன்றத் தேர்தல் நடந்தாலென்ன கெட்டாலென்ன என்று சற்றே ஒதுங்கி விட்டார்களா? உயிரைக் கொடுத்தும் பூர்ஷுவா ஜனநாயகத்தைக் காக்க உறுதிபூண்ட ஜே வி.பி, தலைமையின் வீர முழக்கங்கள் என்ன ஆயின?

ஸ்ரீ.ல.சு.க. தலைமையின் பலவீனமும், கட்சிமாறிகள் அங்கு தலைகாட்டும் வேகமும் மைத்திரி கூட்டத்தின் நடத்தையும் நெருக்கடியின்போது தேசிய முதலாளித்துவத்தலைமையின் வலிமையற்ற தன்மையை விளக்குகின்றன. ஸ்ரீ. ல.சு.க. தலைமைக்குள்ளான குத்துவெட்டுக்கள் எவ்வளவு தூரம் யூ.என்.பி.யையும் அது இட்டமிடும் எதிர்கால சர்வாதிகாரத்தையும் ஆதரிக்கின்றன என்ற தெளிவு ஸ்ரீ. ல. சு. க. தலைமையில் பலரிடம் இல்லாத போதும கீழ்மட்ட ஊழியர்கள் பலரிடம் உள்ள உறுதியான யூ. என். பி. விரோத உணர்வு ஒரு வரவேற்கத்தக்க அம்சம். சந்தர்ப்பவாதிகள் விலகுவது ஸ்ரீ. ல.சு.கட்சிக்கும் நாடடுக்கும் நல்லதுதான். ஆனால் கட்சியைச் செயலற்றதாக்கும் உட்பூசல்கள் பல நல்ல சக்திகளையும் அரசியலிலிருந்தே விரட்டும் அபாயமும இருக்கிறது. ஸ்ரீ.ல.சு.க.யில் உள்ள தேசபக்த முற்போக்கு சக்திகள் யூ.என்.பி,க்கும் பிற ஏகாதிபத்திய பெருவல்லரசு சார்ந்த சக்திகட்கும் எதிரான தேசபக்த முற்போக்கு இயக்கங்களுடன் ஒன்றுபடுவதன்மூலமே குறுகியகால அளவில் எனினும் மக்களது அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பேண முடியும். ஜனாதிபதித் தேர்தலின் போதும் சர்வஜன வாக்கெடுப்பின் போதும் வெளியான பலவீனங்கள் முற்றாக அகற்றப்படாவிடடால் ஸ்ரீ. ல.சு.கட்சியின் எதிர்காலம் என்று அதிகமாக ஏதும் இருக்க முடியாது.

வடக்குக் கிழக்குத் தவிர்ந்த மாகாணங்களில் பெரும்பாலான தமிழர்கள் யூ என். பி.க்கு ஆதரவான நிலைக்குத் தள்ளப்பட்டதில் கூட்டணியினது பங்கு மறக்க முடியாத ஒன்று. யூ.என்.பி. தோற்றால் கலவரம் மூளும் என்ற பீதியை சகல சிறுபான்மையினர் மத்தியிலும் வளர்த்ததில் தொண்டமான் - கூட்டணித் தலைமை சமமான பங்கு வகித்தன. கலவரங்கட்கு உறுதுணையாக நின்றதே யூ.என்.பி.யும் அதன் குண்டர்களும் தான் என்ற விஷயத்தை 1978, 1981 சம்பவங்களின் பின்பும் மூடிக்கட்டி ஸ்ரீ.ல.சு.கட்சியும் யூ.என்.பி.யும் ஒன்றே என்ற விதமாக விஷயங்களைத் திரித்துக் கூட்டணியினர் வடக்கு கிழக்கு தவிர்ந்த பிரதேச தமிழ் மக்களை மிரட்டல் அரசியலுக்குப் பலியாக்கி விட்டனர்.

கத்தோலிக்க கிறித்தவ மதபீடங்களின் தலைமைகள் தம் கோழைத்தனத்தை அம்பலமாக்கிய அதேசமயம், மக்களது ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்ப்பதில் துணிந்து நின்ற கீழ்மட்ட மதகுருமார்களது செயற்பாடு மிகவும் பாராட்டுக்குரியது. லத்தின் அமெரிக்காவைப் போன்று இங்கு மேலிடத்தின் பிற்போக்குவாத நிலைப்பாட்டை துணிந்து எதிர்த்து இவர்கள் செயற்படும் காலம் வருமென்றே எதிர்பார்க்கின்றோம்.

**அரசியல் நிருபர்**

முழுமையாக நோக்குமிடத்து பொதுவாகவே பெரிய பாராளுமன்ற அரசியல் கட்சிகள், ஸ்தாபனங்கள் பஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் அவற்றின் தலைமையில் இருந்தவர்களை விட கீழ்மட்ட ஊழியர்கள் கூடிய உற்சாகத்துடன் அரசாங்கத்தின் சூழ்ச்சியை எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். கட்டுக்கோப்புத் தலைமைகளை மீறி மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் வாக்களித்த முறை இந்தநாட்டில் சர்வாதிகாரம் எளிதாக வென்றுவிட முடியாது என்ற தெம்பை ஊட்டுகிறது. தென் கரையோரப் பகுதிகளில் யூ. என்.பி. யின் தோல்வியும் ஒரு நம்பிக்கையூட்டும் அம்சம். இந்த நேர்முகமான அம்சங்களை அடிப்படையாக வைத்து சர்வாதிகார விரோத-ஜனநாயக இயக்கத்தைக் கட்டியெழுப்புவோமாக.

★

# அரசின் தவறான கொள்கையால்

## மருத்துவத்துறை சீரழிகிறது!

சில காலத்திற்கு முன் இலங்கையின் மருத்துவத்துறை ஓரளவு தரமானதும் சேவைமனப்பான்மை கொண்டதுமான ஒரு துறையாக விளங்கியது. அரசாங்க மருத்துவமனைக்கு சென்ற மக்கள் அதனால் ஆறுதல் அடையக்கூடிய நிலை ஒன்று இருந்தது. இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. மக்களைப் பொறுத்தவரை அரசாங்க மருத்துவ மனைகளுக்கு செல்வது பெரும் நரக வேதனையாகிவிட்டது.

இன்றைய அரசு பதவிக்கு வந்ததும் ஏற்கனவே அரசாங்க மருததுவமனைகளில் அறவிடப்பட்டு வந்த இருபத்தைந்து சதத்தை ரத்துச் செய்து மக்களுக்கு ஏதோ பெரும் சேவை செய்வதாகக் காட்டிக்கொண்டது. அதே வேளை முன்னைய அரசு மருத்துவத் துறையில் கடைப்பிடித்து வந்த பல நடைமுறைகளையும் ரத்துச் செய்து விட்டது. டாக்டர்கள் தாராளமாக வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதி வழங்கியது. அரசாங்க டாக்டர்கள் வெளியில் பணம் பெற்று வைத்தியம் செய்ய அனுமதியும் கொடுத்தது. அதே வேளை வைத்தியர்களுக்கு சம்பள உயர்வோ அல்லது அவர்கள் எதிர்பார்த்த வசதிகளையோ அரசு செய்ய மறுத்து, மேற்படி சலுகைகளால் வைத்தியர்களைத் திருப்திப்படுத்த முனைகிறது. அரசாங்கம் மருத்துவத்துறையில் கையாண்ட இந்நடவடிக்கைகளால் இலங்கையின் மருத்துவத்துறை முற்றாகச் சீர்குலைந்த நிலையில் விடப்பட்டுள்ளதைக் காண முடியும்.

வர்த்தக அடிப்படையிலான தனியார் மருத்துவமனைகள் பெரும்முதலாளிகளினால் நாடுமுழுவதும் திறக்கப்பட்டுள்ளன. டாக்டர்கள் சிலர் ஒன்று சேர்ந்து மூலதனம் இட்டு தனியார் மருத்துவ மனைகளை நடத்தி வருகின்றனர். இந்த மருத்துவ மனைகளை சாதாரண மக்கள் எட்டிக்கூட பார்க்க முடியாது. இவைஏற்கனவே அரசாங்க மருத்துவ மனைகளில் கடமையாற்றிய தரமான டாக்டர்களை எல்லாம் முழு நேரமாக அல்லது பகுதி நேரமாக விலைக்கு வாங்கி விட்டார்கள். இதனால் அரசாங்க மருத்துவ மனைகள் தரும விடுதிகள் போல்தான் காட்சி கொடுக்கின்றன. சில நகரங்களில் உள்ள அரசாங்க மருத்தவ மனை டாக்டர்கள் வெளியில் சென்று பணத்திற்கு நோயாளர்களைப் பார்வையிடுவதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர்.

இன்று அரசாங்க மருத்துவ மனைகளில் ஒருநோயாளி சேர்க்கப்படுவதற்கு முன்பு ஒரு டாக்டரை வெளியில் சந்தித்து ரூபா 40 பணம் கொடுத்து அவரது கடிதத்துடன் சென்றாலே அந்நோயாளி கவனமாகப் கவனிக்கப் படுவார். அதை விடுத்து சாதாரணமாக வார்ட்டில் அனுமதிக்கப்பட்டால் சேடுவாரற்ற நிலையிலேயே அந் நோயாளி விடப்படுவார். இதனால் அவதியுறும் மக்கள் எந்தக் கஷ்டப்பட்டும் 40ரூபா சட்டும் நடைமுறைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அன்றைய 25 சதத்தை ரத்துச் செய்த யூ.என்.பி. இன்று அனும

(6-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்

மாக, மொழி பெயர்த்து முன்கூட்டியே அனுப்பிவிடுங்கள். விடுதலைப் போராட்டம் என்றால் சரணாகதி; பகிஷ்கரிப்பு என்றால் நிபந்தனையற்ற ஆதரவு என்கிற விதமாக ஒரு விசேஷ தமிழ்-ஆங்கில அகராதியையும் தயாரித்து அனுப்பினால் உதவியாக இருக்கும்.

ஜே.ஆரை மிரட்ட விரும்பினால் தளர்பதிக்கு இன்னொரு யோசனை; உங்கள் கைவசமுள்ள, திருகோணமலை எம்.பியின் ராஜினாமாக் கடிதத்தை சபாநாயகரிடம் இப்போதே கொடுத்துவிடுவேன் என்று மிரட்டுங்கள், அந்தப் புண்ணியவான் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் 'அதி உத்தமரை'ப் பாராட்டாமல் விடமாட்டார். இப்போது சமீபத்தில் கூட ஜே. ஆர். மாபெரும் ஜனநாயகவாதி என்று ஐஸ் வைத்து இருக்கிறார். முதலில் அவர் தன் ராஜினாமாக் கடிதத்தை வாபஸ் வாங்க முடியாதபடி நிச்சயம்பண்ணிவிட்டு மிரட்டுங்கள். (சிலவேளை சம்பந்தனை திருகோணமலை எம்.பி.யாக நீடிக்க புதிய சட்டத் திருத்தம் ஒன்று வரலாம், அதற்கெதிராக உத்தரவாதம் தர நான் தயாராக இல்லை.)

## தபால் தலை!

ஒரு மாதம் முன்பு
மரணித்த ஒரு மரபின்
மரணித்த சின்னமாய்
பாராளுமன்றத்தின்
பழையமனை, பச்சையாய்
அதன் பின்னால்
மண்ணுள் ஒரு பகுதி
அமிழ்ந்தாற் போல்
தர்மச் சக்கரத்தின்
பொன் வடிவம்
மண்ணுள்
மேலும் அமிழ்வதுபோல்
ஒரு நினைவு.
மேலே,
மூன்று மொழிகளிலும்
மூன்று லிபிகளிலும்
'தார்மீக சமுதாயம்'
வெற்று வார்த்தைகளாய்
மிளிரும்
கீழே,
பன்னாட்டு நிறுவனங்கள்
சூறைக்குப் பலியான
என்னுடைய நாட்டின்
பேர்
நெஞ்சில் கனக்கும்
வல மேலே மூலையில்
50 என முத்திரையின்
குறித்த விலை மட்டும்
நிசமென்று நினைத்திருக்க
ஏறும் விலைவாசி

— சேகர்

# இங்கிருந்து எங்கே?

**பேராசிரியர் க. கைலாசபதி**

இலக்கியஉலகிலே காலத்துக்குக்காலம் புதிய பிரச்சினைகள் தோன்றுவதுண்டு. அதே போல காலங்காலமாக எழுப்பப்படும் சில வினாக்களும் உண்டு. அத்தகைய நித்தியமான வினாக்களில் ஒன்று, 'இலக்கியம் எதற்காக' என்பதாகும். காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இவ்வினாவிற்கு வேறுபடும் விடைகள் அளிக்கப்படலாம். ஆயினும் இலக்கியம் சம்பந்தமான அடிப்படைக் கேள்விகளில் மேலே குறிப்பிட்டதும் ஒன்றாகும்.

இலக்கியத்தின் குறிக்கோள் பற்றிக் கருத்துரீதியாக விடை கூறுவதிலும் பார்க்க, இலக்கிய கர்த்தாக்களின் நோக்கையும் போக்கையும் விவரிப்பதனால் விளக்கம் தேடுதல் விரும்பத்தக்கதாகும். தனிப்பட்ட ஒரு எழுத்தாளன் காதல், புகழ், பணம், சமய நம்பிக்கை, அரசியல் ஈடுபாடு முதலிய பல்வேறு காரணங்களில் ஒன்றோ பலவோ உந்துவதால் எழுதுகிறான் எனக் கூறலாம். எனினும் எழுத்தாளரைப் பொதுவாக நோக்குமிடத்து மூன்று நிலைப்பாடுகளைக் கவனிக்கலாம்.

எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப்பிராணி. சமுதாயத்தில் எல்லாக்காலங்களிலும் முரண்பாடுகளும், போராட்டங்களும், இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும்வாழ்கின்றான். இந் நிலையில் மூன்று நிலைப்பாடுகளைப் பொதுவாக எழுத்தாளரிடையே காணக்கூடியதாய் உள்ளது.

ஒரு பிரிவினர், பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும், துன்ப துயரங்களையும் எதிர்நோக்காதவராய், அவற்றுடன் சம்பந்தப்படாமல், இன்பமூட்டுவதையே எழுத்தின் தலையாய நோக்கமாய்க் கொண்டு அதற்கியையக் கற்பனைச் சம்பவங்களையும் கதைகளையும் உணர்ச்சிகளையும் இலக்கியமாக்குபவர்கள். இவர்களிற் சிலர் கூறும் வாதம் சுவையானது. ''வாழ்க்கை பலருக்குத் துன்பமயமாயுள்ளது என்பதை நாமும் அறிவோம். எனவே துன்பமயமாயமைந்த வாழ்க்கைக்கு மேலும் துயர் கூட்டுவது போல, சஞ்சலத்தையும், அவலத்தையும் அருவருப்பையும் இலக்கியத்தில் எதற்காகப் புகுத்தவேண்டும்? ஆகவே, துன்பத்தின் மத்தியில் துளி நேர மாற்றத்தை அளிப்பதாய், கற்பனையிலேனும் களிப்பையும் கவர்ச்சியையும் நாம் கொடுத்து உதவ விரும்புகிறோம்; முயல்கிறோம்.'' இவ்வாறு அவர்கள் தமது நிலைப்பாட்டிற்குச் சமாதானமும் விளக்கமும் கூறுவர். நடைமுறையில் பெரு வணிக நிறுவனங்களின் குரலாகவே இது இருப்பதைக் கண்டுகொள்ள அதிக நேரம் பிடிக்காது, தென்னிந்தியாவிலே பெரும் தொழில் துறையாக வளர்ந்துள்ள சினிமா இத்தகைய வாதத்தின் துணையுடனேயே, 'அபினி'யாக மக்களுக்கு ஊட்டப்படுகிறது என்பதனை நாம் அறிவோம். பல இலட்சக் கணக்கில் வெளியிடப்படும் குமுதம், ஆனந்தவிகடன் முதலிய சஞ்சிகைகளும் ''துன்பப்படும் மக்களுக்கு மகிழ்வூட்டுவதற்காகவே'' வெளிவருகின்றன எனக் கூறப்படுவதுண்டு. ''எனது குறிக்கோள் மக்களை மகிழ்விப்பது ஒன்றே'' என்றுதான் ஜெமினி அதிபரும் ஆனந்தவிகடன் வெளியீட்டாளருமான வாசன் எப்பொழுதும் கூறிவந்தார்.

இப்பிரிவினர் அனைவருமே பெருவணிகர் என்றோ, திட்டமிட்டு மக்களை ஏமாற்றிப் பணஞ் சம்பாதிப்போர் என்றோ நாம் கூறவேண்டுவதில்லை. இலக்கியம் தூய்மையானது, பேருணர்ச்சிகளுக்கு வாகனமாய் அமைய வேண்டியது, கற்பனை சார்ந்ததாய் இருக்கவேண்டியது என்று உண்மையாகவே நம்பும் எழுத்தாளரும் இருக்கக்கூடும். எவ்வாறாயினும் சமூகப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்காமல் மானசீக உலகில் இருந்து கொண்டு எழுதுவோர் ஒரு பிரிவினர் எனலாம்.

வரலாற்று அடிப்படையில் நோக்கும்பொழுது மன்னராட்சிக் காலங்களிலும் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பிலும், பாராட்டப்பெற்ற 'அவை' இலக்கியங்கள் இத்தகையன என்று பொதுப்படக் கூறலாம். குறிப்பாக உயர்மட்டத்தினரின் காதல் வாழ்க்கை, இன்பக்கேளிக்கை உல்லாசப் பொழுதுபோக்கு என்பவற்றை மையமாகக் கொண்டு எத்தனையோ சிற்றின்ப நூல்கள் தோன்றின. இவற்றின் மிச்சசொச்சத்தை நவீன காலத்திலே ஐயத்துக்கிடமின்றி நாம் காணக்கூடுமாயினும் முதலாளித்துவசமுதாயத்திலே, வாழ்க்கையை முற்றுமுழுதாகப் புறக்கணிக்கும் இலக்கியங்கள் தோன்றுவது குறைவு என்றே கூற வேண்டும்.

இன்னொரு பிரிவினர், மேலே நாம விவரித்த சமுதாய முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் ஓரளவுக்கு நோக்கி அவற்றைத் தமது எழுத்தின் பொருளாகக் கொள்பவர்கள். சமுதாயத்திலே பரவலாய்க் காணப்படும் துன்ப துயரங்களை உணர்ச்சியின் அடிப்படையிலே அனுதாபத்துடன் பார்க்கும் இப்பிரிவினர், முந்திய பிரிவினரோடு ஒப்புநோக்குமிடத்து தம்மைச் சுற்றியுள்ள யதார்த்தத்தை எதிர்நோக்குகின்றனர் என்பதில் ஐயமில்லை. எனினும்சமுதாய நிலைமைகளைப் பிரதிபலித்தாலே போதும் என்னும் எண்ணம் இவர்களிற் பெரும்பாலானோரைப் பற்றிக்கொண்டிருக்கிறது என்பதிலும் ஐயமில்லை. அதாவதுமுதற்பிரிவினர் பிரச்சனைகள் இருப்பதையே எழுத்தில் பிரதிபலிக்கவில்லை. அதனால் அப்பிரச்சினை இலக்கியத்துக்கு உகந்த உரிய பொருள்கள் அல்ல என்னும் கருத்தைக்கொண்டவராய் உள்ளனர். இரண்டாவது பிரிவினரோ இதற்கு மாறாக, சமுதாயப் பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம் பெறுவதை ஏற்றுக்கொள்கின்றனர். எனினும் தமது கடமை, அல்லது பொறுப்பு அவற்றைத் தத்ரூபமாகச் சித்தரித்து விடுவதே என்று கருதுகின்றனர். காலப்போக்கில் சமுதாயம் திருந்தும் என்ற நம்பிக்கையும் இவர்களுக்குண்டு.

வரலாற்று அடிப்படையில் நோக்கும்பொழுது, நிலப்பிரபுத்துவ சமுதாயத்தையடுத்துவந்துள்ள முதலாளித்துவ சமுதாயஅமைப்பில், சந்தைக்குப் பொருள் தயாரிப்போரில் ஒருவனாக மாற்றப்பட்டுள்ள எழுத்தாளன், வாழ்க்கைப் போராட்டத்தின் அடிப்படையில் வேலைத் தட்டுப்பாடு, மோசடி, ஏற்றத்தாழ்வு, சுரண்டல் முதலிய கொடுமைகளை அநுபவ ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் ஓரளவு கண்டு அவற்றை இலக்கியத்திலும் பிரதிபலிக்கிறான். ஆயினும் இவற்றையெல்லாம், அவன் எழுத்தாளன் என்னும் வகையில் தனிப்பட்ட முறையிலும், தனிப்பட்ட மாந்தரின் அவலங்களாகவுமே எழுதுகிறான். இதன்விளைவாக துன்ப துயரங்களை கண்டு கண்ணீர் வடித்து, இரங்கி ஏங்கும் நிலைக்குப் பெரும்பாலும் அவன் தள்ளப்படுகிறான். யதார்த்தத்தைக் கண்டு மனம் நொந்து வெம்புகிறான்; சில சமயங்களில் சினங்கொண்டு சீறவும் செய்கிறான்; எனினும் அதற்குமேல் அவன் நோக்குப் பெரும்பாலும் போவதில்லை.

நவீன உலகிலே பரவலாகப் பொதுமைச் சிந்தனைகளும், சோஷலிசக் கருத்துக்களும் நிலவுவதால் அவற்றாலும் இரண்டாம் பிரிவு எழுத்தாளர்கள் சிலர் ஈர்க்கப்படுவதுண்டு. எனினும் அவர்களிடத்தும், இலக்கியத்தைப் 'பிரசார' மாக்குதல் கூடாது என்னும் சில ஐயங்களும், அச்சங்களும் ஆழமாக வேரூன்றியிருப்பதைக் காணலாம்.

பல்வேறு வரலாற்றுக் காரணங்களினால், கடந்த கால் நூற்றாண்டு காலத்திலே, ஈழத்துத்தமிழ் இலக்கியத்தில் இப்போக்கு கணிசமான தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது எனலாம்.

எனினும் சமீப காலத்தில் பல இளைஞர்களிடையே குறிப்பாக கிராமப் பக்கங்களில் வாழும் எழுத்தாளர்களிடையே பிரச்சினைகளை இன்னும் நுணுக்கமாகவும் தூலயமாகவும் ஆராய்ந்து அவற்றுக்குப் பரிகாரம் கூறும் இலக்கியப்படைப்புக்கள் வேண்டும் என்னும் கருத்து வேகம் பெற்று வருதலைக் கவனிக்கக் கூடியதாய் உள்ளது. இதற்குத் தருக்கரீதியான காரணங்களும் இல்லாமல் இல்லை. மனிதாபிமான உணர்வுடன் நடைமுறைப் பிரச்சினைகளை சித்தரிதல் ஏற்றதே என்னும் கோட்பாடு ஓரளவு வழக்காகிய பின், அடுத்து என்ன? என்னும் வினா எழுதல் இயல்பே. அதுமட்டுமன்று, பிரச்சினைகளை மேலும் கூர்ந்து நோக்கி, ஒவ்வொன்றினதும் காரண காரியத் தொடர்புகளை விளங்கிக்கொண்டு எழுதும்போது அவற்றை நீக்கவேண்டிய அவசியத்தையும் அதற்கான வழிவகைகளையும் விவரித்தல் தவிர்க்க இயலாததே. நோயை நுணுக்கமாக விளக்கி விவரித்தால் மட்டும் போதுமா? நோயாளியின் மீது இரக்கப்பட்டால் மட்டும் போதுமா? நோயின் வரலாற்றை ஆதியோடந்தமாய்க் கூறினால்மட்டும் போதுமா? நோய் தீர மருந்தும் மார்க்மும் வேண்டாமா?

இன்னும் ஒரு காரணமும் உண்டு. ஒரு காலகட்டத்தில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் புதுமையின் பெயரிலும் புரட்சியின் பெயரிலும் இலக்கியத்தில் புகுத்திய பொருள்களும் சித்திரிப்பு முறைகளும் இன்று வர்த்தக வெளியீடுகளிலும் சாதாரணமாக இடம்பெறத் தக்கவையாகிவிட்டன. 'அரங்கேற்றம்' போன்ற திரைப் படமும் ''யதார்த்த''ப் படைப்பு எனப் பலர் கருதுமளவிற்கு பொருள் எடுதாளப்படுகிறது. அதாவது, இனங்காண்பது கடினமாகிவிட்டது எனலாம்.

இந்நிலையில், சமுதாயத்தில் காணப்படும் முரண்பாடு

(5-ம் பக்கம் பார்க்க)

★ தேசிய கலை இலக்கியப் பேரவை தனது இலக்கிய சஞ்சிகையான தாயகத்தை 1974 ஏப்பிரலில் முதல் இதழாக வெளியிட்டது. அவ் இதழிலேயே இக்கட்டுரையைப் பேராசிரியர் கைலாசபதி எழுதியிருந்தார்.

---

## தேசிய கலை இலக்கியப் பேரவையின்
## அஞ்சலிக் கூட்டம்

இம்மாதம் எட்டாம் திகதி யாழ்ப்பாணத்தில் அமரர் பேராசிரியர்க. கைலாசபதிக்கு தேசிய கலை இலக்கியப் பேரவை அஞ்சலிக்கூட்டம் நடாத்தியது. திரு. அ. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் திருவாளர்கள் இ. முருகையன், ம. சண்முகலிங்கம், எம். ஏ. நுஃமான், கே. செந்திவேல், சி. மௌனகுரு, மா. சின்னத்தம்பி, க. நடனசபாபதி, செ. போகநாதன், எஸ். இராஜேந்திரன், என். இரவீந்திரன், திருமதி. சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர், திருவாளர்கள் வீ. எம். குகராசா, எஸ். ஜெயக்குமார், இ. இராஜேஸ்வரன் ஆகியோர் கவிதா அஞ்சலி செலுத்தினர். இக் கூட்டத்தில் பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்டு மறைந்த பேராசிரியருக்கு தமது உளமார்ந்த அஞ்சலியைத் தெரிவித்தனர். திருமதி ச. கைலாசபதி, பேராசிரியரின் தந்தையார் திரு. கனகசபாபதி ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவ் அஞ்சலிக் கூட்டத்திற்கு கலாநிதி சேனக பண்டாரநாயக்கா, பேராசிரியர் பிரேமதாச உடகம உட்பட, மற்றும் பல நண்பர்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

---

## சீன உயர் ஸ்தானிகரின்
## அனுதாபச்செய்தி

பேராசிரியர் கைலாசபதியின் எதிர்பாராத மரணத்தினால் நாம் மிகவும் வேதனைப்படுகிறோம். அவர் இலங்கையில் ஒரு பிரசித்திபெற்ற எழுத்தாளன். ஆசிரியர், சரித்திராசிரியனுமாக விளங்கினார். பேராசிரியர் கைலாசபதி சீன மக்களின் ஒரு சிறந்த நண்பனாக விளங்கினார். இவர் சீனாவிற்கு விஜயம் செய்துள்ளதோடு நவ சீனத்தைப்பற்றியும் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். சீனாவிற்கும் இலங்கைக்குமிடையே நட்புறவை வளர்ப்பதில் அவர் பெரும் பங்காற்றினார். சீன இலங்கை மக்களிடையே பரஸ்பர விளக்கத்தை ஏற்படுத்தும் ஓர் உற்சாகம் மிக்க செயல்வீரனாகவும் விளங்கினார் என்பதினால் அவரது மரணம் எமக்குப் பேரிழப்பாகும். நாம் அவரை என்றும் நினைவு கூருவோம்.

**காவோசு**
**இலங்கையில் உள்ள சீன மக்கள் குடியரசின் ஸ்தானிகர்**

---

## கலை இலக்கிய அரங்கு

## கைலாஸ் நினைவாக!

நண்பர் கைலாசபதி ஆக்க இலக்கியவாதியல்ல. ஆனால் பல ஆக்க இலக்கியவாதிகளை ஊக்குவித்த ஒருவர்.

நண்பர் கைலாசபதி இலங்கையின் முதுபெரும் விமர்சகர்களுள் ஒருவர் அல்ல. ஆனால் பிற்போக்குச் சிந்தனைகள் ஆதிக்கம் செலுத்தி வந்த விமர்சனத் துறையில் பத்தாம்பசலித் தனத்தின் முதுகெலும்பை முறிப்பதில் முக்கிய பங்கு வகித்தவர்.

நண்பர் கைலாசபதி அரசியல்வாதியல்ல, சினேகமானதும் இனிமையான பண்புடையதுமான அவரது மென்மைக்குள் உறுதியான தேசியவாத, முற்போக்குச் சிந்தனைகளும் ஏகாதிபத்திய ஆதிக்கவாத சக்திகளை எதிர்க்கும் தீவிரமும் தெளிவாகப் படிந்திருந்தன.

நண்பர் கைலாசபதியின் விரிவுரைகளை நான் கேட்டதில்லை. ஆனால் 1981-ம் வருடம் பேராதனையில் சங்க இலக்கியம்பற்றி அவர் நிகழ்த்திய விரிவுரைகள் பேராதனைப் பல்கலைக்கழக ஆசிரியர்களைப் பிரமிப்பில் ஆழ்த்தியது பற்றி அறிவேன்.

நண்பர் கைலாசபதி பல எதிர்ப்புகளின் நடுவே யாழ்ப்பாண வளாகத்தை ஒரு சிறந்த கல்விப்பீடமாக வளர்ப்பதில் ஆற்றிய பணியை என்னைவிட நன்றாக யாழ்-மாவட்ட மக்களும், யாழ் வளாக மாணவர்களும் அறிவார்கள்.

பத்திரிகையாளர் கைலாசபதியை, விரிவுரையாளர் கைலாசபதியை, யாழ்வளாகத்தின் தலைவர் கைலாசபதியைப்பற்றி அதிகம் கருத்து வேறுபாடுகள் இருந்ததில்லை. விமர்சகர் கைலாசபதியை இன்று விமர்சிக்கப் பலர் இருக்கிறார்கள். அவ்வளவு பேரிலும் உருப்படியாக அவரை விமர்சிப்பவர்களும் உருப்படியான விமர்சனங்களும் சாத்தியமானதில் கைலாசபதிக்கு முக்கியமான பங்கு உண்டு. அவரது அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக அவர் யாழ்வளாகத்தை வளர்க்க எடுத்த முயற்சிகளை எதிர்த்த பிற்போக்குவாதிகள் பலர் அவரது ஏகாதிபத்தியவிரோத ஆதிக்கவாத விரோத அரசியலை வசதியாக அசட்டை செய்பவர்கள் கூட இருக்கிறார்கள். கைலாசபதியின் விமர்சன முறை அவரது அரசியலினின்று பிரிக்க முடியாத ஒன்று. அவரது தவறுகள் இயக்கத்தில் ஈடுபடும் எவருக்கும் இயல்பானவை. அவரது சாதனைகளின் நிறைகள் அவற்றின் குறைகளை மீறி ஒளிர்கின்றன.

நண்பர் கைலாசபதியின் சாதனைகள் திறமையின் அடிப்படையில் ஒவ்வோர் துறையிலும் பிரகாசிக்கின்றன. நம்மளவில் அவை அவற்றின் அரசியல் முக்கியத்துவத்தாலும் சமுதாயச் சார்பாலும் மேலும் உயர்கின்றன. பிற்போக்கும், சமுதாயச் சீரழிவும் ஓங்க முனையும் இக்கால கட்டம் நண்பர் கைலாசின் இழப்பை ஈடுசெய்ய மிகவும் அரிதாக்கிவிட்டது.

**பேராசிரியர் சி. சிவசேகரம்**

# மாஓசேதுங் சிந்தனையும் நவீனமயக் கொள்கையும்

சீனா இன்று நடைமுறைப்படுத்தி வரும் நவீனமயக் கொள்கையின் தன்மை நோக்கம், விளைவு என்பன பற்றிய கருத்துக்களைக் கொண்ட தொடர் கட்டுரைகளை 'பீஜிங் ரீவியூ' இவ் ஆண்டு முதல் இதழிலிருந்து வெளியிட்டு வருகிறது. முதலாவது கட்டுரையின் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.

[ஆர். குழு]

சீனாவின் கைத்தொழில், விவசாயம், தேசியப் பாதுகாப்பு, விஞ்ஞானமும் தொழில் நுட்பம் என்பவற்றை நவீனமயப் படுத்துவதை இலக்காகக்கொண்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைக்கு அழுத்தம் கொடுப்பது ஆரம்பமாகி நான்கு வருடங்கள் உருண்டோடிவிட்டன. மானிடத்தின் சரித்திரத்தில் நான்கு வருடங்கள் ஒரு குறுகியகாலமே என்ற போதிலும் சீனச் சரித்திரத்தில் அது பெருமுக்கியத்துவமுள்ள ஒரு திருப்புமுனையாக விளங்குகிறது. கடந்த சில வருடங்களில் கொண்டுவந்த பெருவேறுபாடுகளை எந்த ஒரு சீன அவதானியும் சாட்சி பகரலாம். ஆனால் மாற்றத்தின் தன்மையும், திசையும் என்ன என்பதே கேள்வி. மாவோவின் பின் சீனா எங்கே செல்கின்றது எனப் பலர் கேட்டுவிட்டனர்.

''புரட்சிகரச் சுலோகங்களுக்குப் பதில் நான்கு நவீனமயம் இடம்பெற்றுவிட்டது. தற்போதைய மிதவாத சீனத் தலைவர்கள் தத்துவார்த்த தூய்மைக்கு அதிக அழுத்தம் கொடுக்கவில்லை. புரட்சிக்கான கட்சி ஒரு நிர்மாணக் கட்சியாகிவிட்டது. சீனா இனிமேலும் ஒரு புரட்சிகரநாடல்ல'' இவ்வாறு சீனாவை அவதானிக்கும் சிலர் கூறி வருகின்றனர். வெவ்வேறு ரக மக்கள் மத்தியில் இந்தத் தவறான நம்பிக்கை ஏற்படுவதற்கு அனேக காரணிகள் ஊக்கமளித்தன வெனினும் லின்பியாவோ சியாங்சிங் எதிர்ப் புரட்சி கும்பலும் அவற்றின் அடிவருடிகளும் புரட்சிபற்றித் திரிபு படுத்தப்பட்ட பிரச்சாரமே முக்கியமான தொன்றாகும். இந்தக் கும்பல் தாம் அதிகாரத்திலிருந்தபொழுது வெகுஜனத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி சீனாவின் தத்துவத்தைப் பற்றி பெரும் தடுமாற்றத்தை உருவாக்கினர். பாட்டாளி வர்க்கப் புரட்சியை ஏதோ புதிராக விபரித்ததுடன் மக்கள் ''அவர்களது அடி இதயத்திலேயே புரட்சியை ஏற்படுத்த வேண்டும்'' என மக்களுக்குப் போதனையும் செய்தனர். அவர்கள் சோஷலிசத்தைப் பற்றிப் பல திரிபுபடுத்தப்பட்ட வெளிப்படுத்தலைச் செய்ததுடன் மார்க்சிசம் 'பூர்சுவா உரிமை' எனப் பொதுவில் அங்கீகரித்த வேலைக்கு ஏற்ற பங்கீடு என்பதையும் குறை கூறினர். ''ஒருவன் எவ்வளவு வறியவனாய் இருக்கிறானோ அதிகளவு அவன் புரட்சியாளனாவான்'' எனவும் எமக்குத் தேவைப்படுவது வறிய சோஷலிசம் என்பன போன்ற எண்ணங்களையும் பரப்பினர்.

மாஓசேதுங் அவர்களின் பதாகையின் கீழ் லின் பியாவோ, சியாங்சிங் கூட்டத்தினர் இந்தக் கருத்துக்களை முன்வைத்ததுடன் அவரின் கடைசிகாலத்தில் விட்ட தவறுகளைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டனர். உண்மையான சீன மார்க்சியவாதிகள் இந்தத் தீய செயல்களை அப்போது தெரிந்து கொண்டு அதற்கெதிராக எதிர்த்துப்போராட்டம் நடாத்தினர். நால்வர் கும்பல் நொருக்கப்பட்டதும் நாம் இந்த முட்டாள்தனமான கோட்பாடுகளை நிராகரித்துவிட்டு பொருளாதார தீர்மானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தோம். இந்தச் சூழ்நிலைமைகளில் வெளிநாடுகளில் ''மாவோவின் கொள்கைகளிலிருந்து விடுவிக்கும்'' முயற்சிகள் சீனா ஈடுபட்டுள்ளதாகக் கதை பரப்பப்பட்டது.

அண்மை வருடங்களில் வெளிநாட்டுப் பிரசுரங்களில் நவீன மயத்திற்கான சுலோகங்களை சோ என்லாய், டெங்ஷியாவோபிங் ஆகியவர்களின் பெயர்களுடன் பிணைத்து கூறி வந்துள்ளனர். ஆனால் மாசேதுங் இடைவிடாது நவீன மயத்தை ஆதரித்து வந்திருக்கிறார் என்பதை அவர்கள் அடிக்கடி மறந்தோ அல்லது கவனியாது விடுகின்றனர்.

நவ சீனத்தை ஸ்தாபிப்பதற்கு சில காலம் முன்பு ''எமக்குத் தெரியாதனவற்றை நாம் கற்றுக் கொள்ளலாம். நாம் பழைய உலகத்தை அழிப்பதில் வல்லவர்கள் மட்டுமல்ல ஒரு புதிய உலகைக் கட்டுவதிலும் வல்லவர்கள்'' என மாசேதுங் கூறினார்.

பொருளாதார கட்டுமாண வேலை என்ற முக்கியமான கடமை எமமுன்னேயுள்ளது என 1949 யூலையில் அவர் வலியுறுத்தியிருந்தார். நிபுணர்களிடமிருந்து பொருளாதார வேலையைக் கற்றுக் கொள்ளுமாறும் அவர்களை ஆசிரியர்களாக மதிக்குமாறு கம்யூனிஸ்டுக்களை கேட்டுக் கொண்டார்.

1956ல் உற்பத்திச் சாதனங்கள் சோஷலிஸ உடமையாக்கப் பட்ட பின் ஒரு சோஷலிச அமைப்பின் பிரதான பகுதி சீனாவில் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டதாக 8வது கட்சி காங்கிரஸ் தெரிவித்திருந்தது. தேசத்தை எதிர்நோக்கும் பிரதான கடமை உற்பத்தி சக்திகளை வளர்த்தெடுப்பதற்காக சகல முயற்சிகளையும் ஒன்று திரட்டி நாட்டை கைத்தொழில் மயமாக்க படிப்படியாக மக்களின் வளர்ந்துவரும் பொருளாதார கலாச்சார தேவைகளைப் போக்குவதேயாகும். என அதுகுறிப்பிட்டிருந்தது.

நுட்பம் என்பவற்றை இந்த நூற்றாண்டின் முடிவில் நவீனமயமாக்கி சீனாவின் தேசிய பொருளாதாரத்தை உலகின் முன்வரிசையில் இடம் பிடிக்கச் செய்யும் பிரமாண்டமான திட்டத்தை உத்தியோக பூர்வமாக முன்வைத்தார்.

எவ்வாறாயினும் மாசேதுங்கின் இந்தச் சரியான கருத்துக்கள் பின்னைய வருடங்களில் அவர் தவறாக வர்க்கப் போராட்டத்தின் இலக்கை விரிவு படுத்தியதாலும் கட்சி

லெனின் ஒரு தடவை சோஷலிசப் புரட்சியின் இரண்டு பிரதான கடமைகள் பற்றி விளக்கம் தந்தார். பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றும் பிரச்சினையைத் தீர்த்து சுரண்டும் வர்க்கத்தின் உடமைகளைப் பறிமுதல் செய்து எதிர்ப்புகளை பெருமளவில் அடக்கியபின் ஒவ்வொரு சோஷலிசப் புரட்சிக்கும் முதலாளித்துவத்தி

## வறுமையை ஒழிப்பதே சோஷலிசத்தின் நோக்கம்

பெருமளவான புரட்சிக் காலத்து தன்மையுடைய கொந்தளிப்பான வெகுஜன வர்க்கப் போராட்டங்கள் பெருமளவில் முடிவுக்கு வந்து விட்டன'' என மாசேதுங் 1957ல் கூறியிருந்தார். ''உற்பத்திச் சக்திகளை விடுதலை செய்யும் எமது அடிப்படைக் கடமை என்ற நிலையிலிருந்து புதிய உற்பத்தி உறவுகள் என்ற நிலையில் அவற்றை பாதுகாத்து விரிவுபடுத்த வேண்டும்.'' ''புதிய சமருக்காக எமது நாட்டின் சகல இனமக்களையும் இயற்கைக்கு எதிரான சமரில் ஐக்கியப் படுத்த வேண்டுமென'

பிழைகளை உடனடியாகத் திருத்தத் தவறியதனாலும் நடைமுறைப்படுத்தப்படாதது கவலைக்குரியதாகும். இதன் விளைவாக வேலையின் மாற்றம் 20 வருடங்களுக்கு மேலாகத் தாமதிக்கப்பட்டது. மாசேதுங்கின் சிறந்த அம்சங்களையும் தவறுகளையும் முழுமையாக மதிப்பீடு செய்த கட்சி மாசேதுங் சிந்தனைக்கும் அவர் பிற்காலத்தில் விட்ட தவறுகளுக்குமிடையில் வேறுபாட்டை திட்டவட்டமாக

லும் மேம்பாடான அதிகரித்த உழைப்புத்திறனை கொண்ட ஒரு சமுதாய அமைப்பை ஏற்படுத்தும் அடிப்படையான கடமையொன்று முன்னுக்கு வந்தேயாக வேண்டும் என்றார். ''அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியபின் முதற்தரமானதும் அடிப்படையானதுமான பாட்டாளி வர்க்கத்தின் நலன் சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளையும், உற்பத்திசெய்த பொருள்களின் தொகையையும் மிகப் பிரமாண்ட அளவில் அதிகரிக்கச் செய்வதேயாகும்'' எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

## வெறும் அரசியல் சுலோகங்கள் சோஷலிச பொருளாதாரத்தை உருவாக்கமாட்டா!

அழைப்பு விடுத்த அவர் சீனாவை நவீன கைத்தொழில் நவீன விவசாயம் நவீன விஞ்ஞானம், கலாச்சாரத்துடன் கூடிய ஒரு சோஷலிச நாடாக்க வேண்டும் என்றார்.

1964ல் பிரதமர் சோ என்லாய் கட்சியின் மத்திய கமிட்டியினதும் தோழர் மாசேதுங்கினதும் பணிப்புரையின் பேரில் மூன்றாவது மக்கள் காங்கிரசிற்கு அரசாங்கத்தின் வேலைபற்றிய தனது அறிக்கையில் முதற் தடவையாக கைத்தொழில் விவசாயம், தேசிய பாதுகாப்பு விஞ்ஞானம் - தொழில்

வரையறை செய்தது. உண்மையில் நவீனமயப் படுத்தும் வேலைக்கு கவனம் செலுத்தும் தற்போதையநிலை மாவோ ஒரு சமயத்தில் கொண்டிருந்த சரியான நிலையேயாகும்.

புரட்சிக்கும் நிர்மானத்திற்குமிடையே உள்ள உறவு பற்றி மாசேதுங் சிந்தனை தெரிவிக்கும் கருத்து மார்க்சிச கருத்திற்கு முழுமையாக இசைந்ததேயாகும்.

புரட்சிக்கு முந்திய சீனாவின் உற்பத்தி மட்டத்தையும், அதன் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் ஒருவர் மனதிற் கொண்டால் சோஷலிசப் புரட்சி தீர்த்துவைக்க வேண்டிய முன்னணி, உடனடிப் பிரச்சினையையே மேலே லெனின் குறிப்பிட்ட பின்னைய கடமையாகும்.

மிகுதி அடுத்த இதழில்

★

## இங்கிருந்து............

(4-ம் பக்கத் தொடர்)

களையும் துன்ப துயரங்களையும், போராட்டங்களையும் உதிரியான தனிமனிதர்களின் பிரச்சினைகளாக மாத்திரம் கண்டு காட்டாமல் அவற்றை வர்க்கங்களுக்கிடையே நிகழும் போராட்டத்தின் வெளிப்பாடுகளாக காண்பது இன்றியமையாததாகிறது. இரண்டாவது பிரிவிலே தொடங்கியபோதும், வர்க்க அடிப்படையிலே பாத்திரங்களை அணுகாமல் விஷேசமான தனிப்பிறவிகளை இலக்கியமாந்தராகக் கொண்டவையாலேயே, ஒரு காலத்து ''முற்போக்கு'' எழுத்தாளர் ஜெயகாந்தன். இன்று 'பிரமோபதேசம்' செய்பவராக உருமாறியுள்ளார். இது ஒரு குறிப்பிட்ட எழுத்தாளனது தனிப்பட்ட பலவீனம் மட்டுமன்று. அவன் பற்றிக் கொண்டிருந்த இலக்கியக் கோட்பாட்டிலே உள்ளார்ந்த பலவீனமாய் இருந்த அம்சத்தின் பரிணாமம் என்றும் கூறலாமல்லவா? ஜெயகாந்தனை விதிவிலக்கான ''வில்லனாக'' நாம் விவரிக்க வேண்டியதில்லை. பல எழுத்தாளரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எடுத்துக்காட்டு என்றே சொல்லவேண்டும் வர்க்க ஆய்வின் அடிப்படையில் தூலமான சந்தர்ப்பங்களில் பாத்திரங்களைச் சித்தரிக்கத் தவறும் எந்த எழுத்தாளனும் ஜெயகாந்தன் ஆவதற்கு அதிக நாள் பிடிக்காது.

இதை இன்னொரு வகையாகவும் நோக்கலாம். ஜெயகாந்தனது எழுத்தில் இன்றும் நுணுக்க விவரங்களைக்கூறும் ''யதார்த்த''ப்பண்பு, அதாவது இயற்கையாகப் பாத்திரங்களைத் தீட்டும் ஆற்றல் குறைவின்றியே இருக்கிறது. மனிதாபிமான உணர்வும் இல்லையென்று அடித்துக் கூறவியலாது. ஆயினும் சமுதாய மாற்றத்துக்கு ஆதரவு தருபவராக அவர் இன்று இல்லை. எனவே பிழை எங்கே உள்ளது என்று கவனமாய்த் தேடவேண்டும்.

இந்த இடத்திலேதான் மூன்றாவது பிரிவினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமன்றி, அதனை மாற்றி அமைக்கும் பணியில் பங்குபற்றுவதுடன், அப்பணி வெற்றி பெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாகத் துணிந்து ஏற்றுக்கொள்வதும் இன்றைய தேவையாகும் என இப்பிரிவினர் வற்புறுத்துகின்றனர். இவ்வாதத்தை இலகுவில் ஒதுக்கிவிட முடியாது. அநுபவமும் அனைத்துலகப் போக்கும் இவ்வாதத்துக்கு அரண் செய்வனவாகவே உள்ளன.

வரலாற்று அடிப்படையில் நோக்கும் பொழுது, தொழிலாளர், விவசாயிகள் வர்க்கத்திலிருந்து தோன்றும் கலைஇலக்கியக் கோட்பாட்டின் காத்திரமான குரல் இது என்பது வெளிப்படை. எதிர்காலத்தை மாற்றியமைக்கும் பெரும்பணிக்கு அவர்கள் தலைமைதாங்குபவர்கள் ஆதலின் அக்குரல் வலிமையுடையது என்பதில் ஐயமில்லை. இக்கோட்பாடு இலக்கியத்தில் செயற்படுகையில் சிறப்பான பிரச்சினைகள் தோன்றும் என்பது உண்மை. கலையழகு, உருவம், நம்பகத்தன்மை, ஏற்புடைமை, மொழிநயம் முதலிய பல்வேறு அம்சங்கள் இணைதல்வேண்டும். புதிய நெறிமுறைகள் வகுக்கப்படல் வேண்டும். ஆயினும் இவை எதிர்நோக்க வேண்டிய சவால்களே. இந்தக் காலகட்டத்தில் இன்று ஈழத்து எழுத்தாளர்கள் வந்து நிற்கின்றனர். தருக்கரீதியாக வளர்ந்து வந்துள்ள இப்போக்கைத் தக்கபடி முன்னெடுத்துச் செல்வதிலேயே எமது எதிர்காலம் தங்கியுள்ளது.

★

# தொண்டமானுக்கு உயர்பதவியாம் தொழிலாளர் வதை தொடர்கிறது

தொண்டமான்-செல்லச்சாமி - இ,தொ.கா. கம்பனி கடந்த இரு தேர்தல்களிலும் ஜே. ஆருக்கும் யூ. என். பிக்கும் என்றுமில்லாத உதவியைச் செய்துள்ளனர். உலகறிந்த இவ் உதவிக்கு நிச்சயம் பிரதி உபகாரம் இருக்கவே செய்யும் என்றே தோட்டத் தொழிலாளர்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றனர். அப்பிரதி உபகாரம் தொண்டமான்-செல்லச்சாமி போன்ற தலைவர்களுக்கு மட்டும் கிடைக்குமேயன்றி தோட்டத் தொழிலாளர்களுக்கு அல்ல என்பதும் இப்போது வெளிச்சமாகி வருகிறது. இப்பொழுது தொண்டமானுக்கு உப ஜனாதிபதி பதவி என்ற பேச்சு பரவலாக அடிபடுகிறது. அதே போல் செல்லச்சாமி எம்.பி - மந்திரி என்றும் பேசப்படுகிறது. இது நடைமுறைக்கு வருவது ஏதோ உலக அதிசயமாகக் கொள்ள முடியாது. உதாரணமாக தனிக் கட்சி தனிநபர் ஆட்சி நடக்கும் சிங்கப்பூரில் ஜனாதிபதியாக இருப்பவர் ஒரு இந்திய வம்சாவளிநபராகும்; சிரேஷ்ட பிரதிப் பிரதமரும் வெளிநாட்டு அமைச்சரும் சுத்தமான தமிழர்களேயாவர். சிங்கப்பூரின் பாணியை ஜே.ஆர். ஏற்கனவே பின்பற்ற ஆரம்பித்துவிட்டபடியால் தொண்டமான் உயர் பதவி பெறுவது ஒரு விசித்திரமாக இருக்க முடியாது. நாம் சுட்டிக்காட்டுவது குடியுரிமை உட்பட அடிப்படையான ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் பிரதி உபகாரம் என்ன என்பதேயாகும்.

தோட்டத் தொழிலாளர்களை நோக்கி வெறும் எலும்புத்துண்டுகளே வீசப்படுகின்றன. அவை கூட உண்மையான சேரவேண்டிய இடங்களைச் சேரவில்லை. இந்திய வம்சாவழியினர் மத்தியில் உள்ள வசதி படைத்தோர், தொண்டமான் - இ-தொ.கா. விற்கு நெருங்கியோர், பந்தம் பிடிப்போருக்கே சென்று விடுகிறது. 402 மலையக ஆசிரியர்களுக்கு நீண்டகால இழுத்தடிப்புக்குப் பின் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது இதில் குளறுபடிகளும், செல்வாக்குகளும் பாவிக்கப்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. நியமனம் கிடைக்கும் போதே முழு விபரமும் வெளிவரும்.

அக்கரைப்பத்தனை அல்டோரித் தோட்டத்தில் அண்மையில் இடம் பெற்ற தொழிலாளர்-நிர்வாக தகராற்றில் ஒரு இளம் தோட்டத் தொழிலாளி தோட்ட வாகனத்தால் மோதப்பட்டு பலிகொள்ளப்பட்டிருக்கிறார். அன்று சிவனு லட்சுமணனுக்கு போலிக் கண்ணீர் வடித்து அதன் மூலம் பதவி பெற்ற அதே நபர்கள் இன்று அல்டோரித் தோட்டத்திலும் போலிக் கண்ணீர் வடித்து சபதங்கள் ஏற்கின்றனர். அன்று போராட்டம் என்று முழங்கியவர்கள். இன்று ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுவோம் என்று ஈனக்குரல் எழுப்புகின்றனர். தோட்டத் தொழில்துறை இன்று ஜனாதிபதியின் நேரடிப் பொறுப்பிலேயே உள்ளது. அப்படி இருந்தும் தொழிலாளர் வதைக்கப்படுவது தொடர்கிறது. வெறும் வார்த்தை ஜாலம் செய்து தமது பதவிகளை உயர்த்திக் கொள்ளும் தலைவர்களால் தோட்டத் தொழிலாளர்கள் என்றுமே உரிமைகள் பெறப் போவதில்லை. அவர்கள் தமது சொந்தக் கால்களில் எழுந்து போராடும் சந்தர்ப்பத்தை நோக்கி, அரசியல் சிந்தனையில் தெளிவுபெற்று முன்செல்வதாலேயே விமோசனம் பெற முடியும்.

★

1-ம் பக்கத் தொடர்...

## மாநகர - நகரசபைத்

பதும் மறுக்கமுடியாத உண்மை. நகரத்தில் மக்களுடைய பல தேவைகள் கடந்த மூன்று வருடங்களில் பெருமளவு பெருகி இருக்கின்றன. மாநகர சபையின் நிர்வாகமோ தனக்கும் நகரத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லாதது போன்று நடந்து வருகின்றது. உறுப்பினர்கள் சம்பளம் தொடக்கம் வேறும் சகல வசதிகளையும் பெற்று சுகமாக மாநகரசபை வந்து செல்கிறார்கள் இடையிடையே இனம் மொழி பற்றி ஒரு தீர்மானம் ஒரு அறிக்கை இவற்றுடன் உரிய காலமும் முடிவடையப் போகிறது பதவிகளைப் பங்கு போடுவதிலும் அவற்றில் இருந்து உறிஞ்ச வேண்டியவை பற்றி அக்கறைப்படுவதிலும் கூட்டணிப் பிரமுகர்கள் காட்டும் அக்கறையும் அவசரமும் தமிழ் மக்களுக்கு சேவை செய்வதில் இல்லாமல் போய்விடுகிறது.

இந் நிலையிலே அடுத்த மாநகர-நகர சபைத் தேர்தல்களுக்கு கூட்டணி தயாராகி வருகிறது. என்ன சுலோகத்தைத் தேர்தல் களத்துக்கு கொண்டு வரலாம் என மந்திராலோசனைகள் நடைபெறுகின்றன. தமது நிர்வாகத்தின் கீழ் நகரங்களை அபிவிருத்தி செய்த லட்சணம்பற்றி வாய் திறந்தால் விஷயம் பிழைக்கும் என்பதால் அவை யாவற்றையும் மேவக்கூடிய உணர்ச்சி மிக்க அரசியல் சுலோகத்தையே இப்பொழுது தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் யார் யாருக்கு என்ன பதவிகள் என்பதில் இழுபறிகள் ஆரம்பித்துள்ளன. தற்போதைய யாழ்-மேயர் எம்.பி.பதவிக்கு தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நிற்பதாகக் கூறப்படுகிறது. இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி செயலாளர் நாயகம் அமிர் தனக்குத் தலையிடி கொடுக்கும் எம்பிக்கள் ஓரிருவரை மேயர் பதவிக்கு மாறும்படி ஆலோசனையும் தூண்டுதலும் கொடுத்து வருகிறாராம். இதேபோல் ஏனைய வடக்கு -கிழக்கு நகரசபைகளிலும் இழுபறிகள் நடைபெறுகின்றன இவை யாவும் தமிழர் விமோசனத்திற்கல்ல. பதவிகள் பட்டங்களை அடைந்து அதன் மூலம் ''பசை'' தேடும் முயற்சிகளேயாகும். இதுவரை அதிகாரத்தில் இருந்த அனைவரும் வெவ்வேறு வழிகளில் தமது பைகளை நிரப்பிவிட்டனர் தத்தமது உறவினர் சகாக்களுக்கும் வழிவகை செய்து கொடுத்துவிட்டனர். ஆனால் வரியிறுப்பாளர்களான சாதாரண மக்கள் பெற்றது அனுபவித்தது பூச்சியமாகவே உள்ளது.

தமிழர் விடுதலை என்ற பெயரில் தமிழர் வியாபாரக் கூட்டணி செய்து வந்தவைகளையும் செய்து வருபவைகளையும் தமிழ் மக்கள் நாளாந்தம் எடை போட்டவண்ணமே உள்ளனர். அவர்களது பிடிக்குள் ஒருநாள் இவர்கள் சிக்கவே செய்வர்.

## வில்சன் தரகும் அமிரின் புரட்டும்

ஜனாதிபதி ஜயவர்த்தனவிற்கு தமிழ் மக்களின் மூலம தலைவலி ஏற்படும்போது அதற்கான மாத்திரைகளைச் சரியான முறையில் பெற்றுக் கொள்வதற்கு கனடாவுக்கு தொலைபேசி அழைப்புவிடுத்து மறைந்த செல்வநாயகத்தின் மருமகன் கலாநிதி வில்சனை அடிக்கடி அழைப்பது வழக்கம். இவ்வாறு அழைக்கப்பட்ட வில்சன் தனக்குத் துணையாக யூ. என். பி. அரசாங்கத்தின் சட்ட ஆலோசகரான நீலன் திருச்செல்வத்தையும் (இவர் கூட்டணியின் கொள்கை வகுப்பவரும் கூட) துணைக்கு அழைத்துக்கொண்டு ஜே. ஆரின் தலைவலிக்கு மாத்திரை கண்டு பிடித்துக் கொடுப்பதும் நடைமுறை' இவ்விருவரும் அரசியல் தரகு வேலையில் அனுபவம் பெற்றதும் அன்றி யூ. என். பி.-கூட்டணி வர்க்க உறவுக்கான வேலைகளில் ஏற்கனவே வெற்றியும பெற்றுவிட்டனர்.

அண்மையில் கனடாக் கலாநிதியும் அரசாங்க சட்ட ஆலோசனைக் கலாநிதியும் (வில்சனும்·நீலனும்) இங்கு தமது வேலையைச் செய்தனர் பத்திரிகைகளும் செய்திகள் வெளியிட்டன. தமிழர் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் யாழ்ப்பாணத்தில் பேசும்போது தாம் அண்மைக் காலங்களில் ஜே.ஆருடன் எதுவும் பேசவில்லை என்று அடித்துக் கூறினர். சில தினங்கள் கழித்து செயலாளர் நாயகம் ஒரு கூட்டத்தில் பேசுகையில் ஜே. ஆருடன் நாம் பேசிய சில பத்திரிகைகள் விஷயங்களைத் விஷமத்தனமாக திரிக்கின்றன என்று பத்திரிகைகளைச் சாடினர். பின்பு அதே அமிர்தலிங்கம் அவர்கள் ஜே. ஆரைக் கண்டதும் உண்மை பேசியதும் உண்மை அதுவும் வில்சன் கூறிய விஷயங்களின் அடிப்படையில் தான் பேசினேம் என்றும், அப்பேச்சுவார்த்தை உத்தியோக பூர்வமானதல்ல, ஏதோ போக்குவரத்தில் கண்ட இடத்தில்தான் பேசினேம் என்றும் கூறினர். ஏன் இந்தநிலை? யூ. என் பி. உறவை விடவும் முடியாது தமிழ் மக்களிடம் தப்பவும் வேண்டும். ஒரே நேரத்தில் இரண்டையும் செய்தால் தமிழ் மக்கள் தங்களை ஏற்க மாட்டார்கள் என்பதை யாவது இந்த கூட்டணித் தலைமை புரிந்து வைத்திருக்கின்றதே, அதுவே தமிழ் மக்களின் புதிய அரசியல் விழிப்புணர்வுக்கு எடுத்துக்காட்டாகவும் உள்ளது. ★

1-ம்பக்கத் தொடர்

## ஜே. ஆரின் கனவு ......

றவர்களால் கிரகித்துக்கொள்வது கஷ்டமானதேயாகும்.

அடுத்த பதவிக்காலத்துக்கிடையில் அமெரிக்க ஏசமானர்களின் உதவி ஒத்தாசையோடும், உலகப் பிற்போக்கு சக்திகளின் அரவணைப்போடும் தமது வர்க்க நலன் சார்ந்த திட்டங்களை முற்று முழுதாக நிறைவேற்றி வைத்துவிட்டு, தனக்குப்பின் தகுதியான ஒரு வாரிசையும் உருவாக்கி விட்டு நிம்மதியாகக் கண்களை மூடிவிடலாம் என்றே ஜே ஆர். ஜயவர்த்தன கனவு கண்டு கொண்டுருக்கிறார். ஆனால் ஜே. ஆரின் இக்கனவு நனவாக இந்நாட்டு மக்கள் இடம்கொடுக்கப் போவதில்லை. ஏற்கனவே ஜே. ஆர். இந்நாட்டுத் தமிழ் மக்களிடம் தோல்வி கண்டுவிட்டார். ஜே. ஆரின் சகாக்களான தமிழர் கூட்டணியினரையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு தமிழ் மக்கள் யூ. என். பி. எதிர்ப்பில் -ஜே. ஆரின் நோக்கங்களை புரிந்த எதிர்ப்பதில் மீண்டும் மீண்டும் தமது நிலையை உறுதிப்படுத்திவிட்டனர். இந்த நிலையைச் சிங்கள மக்கள் முற்று முழுதாக எடுக்கும் நிலை அதிக தூரத்தில் இல்லை. ஏற்கனவே இடம் பெற்ற இரு தேர்தல்களில் யூ. என். பி. யையும் — ஜே. ஆரையும் எதிர்க்கும் திறன் சிங்கள மக்களிடம் அற்றுப் போகவில்லை என்பதைத் தெளிவாக்கி உள்ளது.

மேலும் இதுவரை காலமும் ஜே. ஆரினால் போர்த்து மூடிக் கட்டப்பட்டு வந்த யூ, என். பி. உட்பூசல் எந்த நேரமும் எரிமலையாக வெடிக்கும் சந்தர்ப்பம் எதிர்நோக்கப்படுகிறது. ஜே. ஆர். எவ்வளவு நவீனபுத்தராகவேஷம் போட்டாலும் அவரது நரித்தந்திர நோக்கங்களை அவருடன் கூட இருப்பவர்கள் புரிந்து கொள்ளாமல் இல்லை. ஏற்கனவே ஜே. ஆர்.-பிரேமதாச கோஷ்டிகள் என்று அரசியல் அவதானிகளால் சுட்டிக் காட்டப்பட்ட உட்கட்சிப் போட்டா போட்டி எல்லாக் காலமும் சாந்தமாக்கப்படும் என எவராலும் எதிர்பார்க்க முடியாது.

ஆதலால் ஜே. ஆர். தனது கனவை முற்று முழுதாக நனவாக்க முயலும் அடுத்துவரும் ஆண்டுகள் பல வகைகளிலும் அவரது அதிகாரத்திற்குப் பெரும் சவால்களாக அமையும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இச் சந்தர்ப்பத்தில் யூ. என், பி. எதிர்ப்பு சக்திகள் தம்மை தயார்படுத்தி, ஒழுங்கு செய்து கொண்டு மக்களுக்கு சரியான தலைமை கொடுத்தால் ஜே, ஆரினதும் யூ, என். பி. யினதும் நாட்டை நாசப்படுத்தும் கனவை முறியடித்து மக்களால் முன்னேற முடியும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

★

3-ம் பக்கத் தொடர்......

திக்கு 40 ரூபா நோயாளிகளிடம் அறவிடுகிறது.

இது மட்டுமல்ல அரசாங்க மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லாதது மட்டுமன்றி மருந்து வகைகளும் இல்லாத நிலையே உள்ளது. டாக்டர்கள் வெளியில் மருந்துகளை வாங்கும்படி எழுதிக்கொடுத்து வருகிறார்கள். இதனால் தனியார் மருந்துச்சாலைகள் மக்களால் நிரம்பி வழிகின்றன. மருந்துகளின் விலை ஆனை விலை குதிரைவிலையாகவே உள்ளன, ஒரு கணிசமான நோய் கண்ட ஒரு நோயாளி அரசாங்க மருத்துவ மனைக்கு செல்வதானால் அங்கு ஒரு வாரம் தங்கி சிகிச்சை பெற வேண்டி வந்தால் கிட்டத்தட்ட ரூபா 500 யை செலவு செய்யும் நிலையே காணப்படுகிறது அப்படிச் செலவு செய்யாவிட்டால் ஒருவர் அரசாங்க மருத்துவ மனைக்குச் செல்வது அர்த்தமற்ற ஒன்றாகி விடும் என்றே கூற வேண்டும்.

அண்மையில் கடுமையான நோய் காரணமாக அரசாங்க மருத்துவமனையின் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரிடம் ஒரு நோயாளி கொண்டு செல்லப்பட்டார். வழமையான அனுமதி 40 ரூபாவுடன் யாழ் மத்திய மருத்துவ மனையில் அந்த நிபுணரிடம் சிகிச்சை பெறுவதே நோக்கமாக இருந்தது. அப்பொழுது அந்த நிபுணர் இந்நோய்க்கு உடன் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும். ஆனால் அரசாங்க மருத்துவ மனையில் உடனடியாக இச் சத்திர சிகிச்சை செய்ய முடியாது. எனவே நகரில் உள்ள தனியார் மருத்துவ மனையில் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தவே நோயாளியைக் காப்பாற்றும் நோக்குடன் அதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. சத்திர சிகிச்சைக்கு மட்டும் அந்த அரசாங்க சத்திரசிகிச்சை நிபுணர் ரூபா 2,000 அறவிட்டுக் கொண்டார். மருத்துவ மனைக்கான செலவுகள் இதில் அடங்கவில்லை. இது இன்றைய மருத்துவத்துறைச் சீர்கேடுகளுக்கு ஒரு உதாரணம். ஒரு நோயாளியின் உயிர் அவரது பண வசதியால் தீர்மானிக்கப்படும் அவல நிலைக்கு நமது நாடு வந்துள்ள கேவலத்தை மக்கள் உணரவேண்டும். இது டாக்டர்கள், மருத்துவமனை ஊழியர்களைப் பொறுத்த விடயமில்லை. மக்களைப் பற்றி எள்ளளவேனும் அக்கறை அற்ற பெரு முதலாளித்துவ யூ. என். பி. யின் மோசமான கொள்கைகளின் வெளிப்பாடேயாகும்.

அச்சுப்பதிப்பு; யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி; யாழ்ப்பாணம் வெளியீடு;. நவரத்தினம் 15/1 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்